

# JAMAL ACADEMIC RESEARCH JOURNAL: AN INTERDISCIPLINARY

Special Issue | January 2016 | ISSN 0973-0303

# சாகித்ய அகாதமி விருது பெற்ற படைப்புகள்

## எட்டாவது தேசியக் கருத்தரங்கம்

## TANAS 2016

பதிப்பாசிரியர்

**முனைவர் எஸ். நாகூர் கனி**

**முதுகலை & தமிழாய்வுத்துறை**

**ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)**

ஆற்றல் வளத் தனித்தகுதி பெற்றது

(தேசியத் தர மதிப்பீட்டில் 'A' தரச்சான்று - CGPA 4.0க்கு 3.6 பெற்றது)

திருச்சிராப்பள்ளி - 620 020, தமிழ்நாடு, இந்தியா.

Since 1951

ஜனவரி 2016

Scanned by CamScanner

## பொருளடக்கம்


1. வேரில் பழுத்த பலா - சமுதாயச் சிந்தனை
தெ. அகிலா 1

2. வைரமுத்துவின் கள்ளிக்காட்டு இதிகாசத்தில் சூழலியல் அமைவுகள்
முனைவர் ஆ.அங்கமுத்து 3

3. தோல் நாவலில் தொழிலாளர்களின் அவல நிலை
மா. அருணா 5

4. யாம் உண்பேம் சிறுகதை காட்டும் வறட்சி
முனைவர் ஜெ. அருள் இருதய ஜெயந்தி 7

5. ரா.பி. சேதுப்பிள்ளையின் தமிழின்பத்தில் இலக்கிய ரசனை
மு. அலிபிநிஷா 9

6. “தோல்” நாவல் காட்டும் பெண் தொழிலாளர்கள்
முனைவர் க. அழகர் 11

7. தோல் நாவலில் அருந்ததியர் இன சித்தரிப்பு
த. அறிவழகன் 13

8. மு. மேத்தாவின் ஆகாயத்துக்கு அடுத்தவீடு கவிதைகளில் காப்பியத் தொன்மங்கள்
முனைவர் கா.ஆமினாள் பீவி 15

9. ‘அகல்விளக்கு’ நாவலில் அகவிழிப்புணர்வுச் சிந்தனைகள்
முனைவர் தே. இந்திரகுமாரி 17

10. கள்ளிக்காட்டு இதிகாசம் விருதுக்கான மதிப்பும் மதிப்பீடும்
ச. இளங்கோமணி 19

11. காவல் கோட்டம் - புதினத்தை முன்வைத்து
கு. ராசேந்திரன் 21

12. வேரில் பழுத்த பலா புதினத்தில் சமுதாயச் சிக்கல்களும் தீர்வுகளும்
முனைவர் கோ. இராமசந்திரன் 23

13. தமிழின்பத்தில் அறிவும்திருவும்
முனைவர் இரா. இராமகுமார் 25

14. ஆகாயத்துக்கு அடுத்த வீடு கவிதைத் தொகுப்பில் வரலாற்றுச் சுவடுகள்
முனைவர் ஆ.இராஜாத்தி 27

15. காதல் - காமம் - கற்பு
சி. இராஜாராம் 29

16. சாகித்ய அகாடமி பரிசுப் பெற்ற ஈரோடு தமிழன்பனின் - ‘வணக்கம் வள்ளுவ’ கவிதையில் ஏதில் மகளிருக்கான உரிமை வாசிப்புகள்
முனைவர் இரா. பூ. இராஜேஸ்வரி 31

17. கொற்கை புதினத்தில் பரதவர்களின் ஏற்றத்தாழ்வுகள்
தா. இனிக்கோ 33

18. பிசிராந்தையாரில் புரவலரும் - புலவரும்
முனைவர் ஸ்ரீ.உமா 35

19. வைரமுத்துவின் ‘கள்ளிக்காட்டு’ இதிகாசத்தில் சொலவடைகள்
ச. கண்ணன் 37

20. ‘சூடிய பூ சூடற்க’ சிறுகதைகளில் விளிம்புநிலை மக்கள்
ம. கண்ணன் 39

21. மேலாண்மை பொன்னுச்சாமியின் மின்சாரப்பூ சிறுகதை தொகுப்பு
A. கருணாகரன் 42




Scanned by CamScanner

# யாம் உண்பேம் சிறுகதை காட்டும் வறட்சி

முனைவர் ஜெ. அருள் இருதய ஜெயந்தி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), பெரியகுளம்.

சிறுகதைகள் குறைந்த அளவு பக்கங்களில் வாழ்க்கையின் தத்துவத்தை, மனிதரின் மறுபக்கத்தை, அவர்தம் வாழ்வியலை,அனுபவத்தை வெளிப்படுத்தும் திறன் கொண்டவை.சமுதாயத்தின் நிகழ்வைப் படம் பிடித்துக் காட்டுபவை. அத்தகு சிறுகதைகளைத் திறம்பட எழுதும் எழுத்தாளர்களுள் ஒருவரான நாஞ்சில் நாடனின்'சூடிய பூ சூடற்க' எனும் சிறுகதைத் தொகுப்பில் உள்ள யாம்உண்பேம் எனும் சிறுகதை வெளிப்படுத்தும் வறட்சியின் படிநிலைகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

**கதைச்சுருக்கம்:**

யாம்உண்பேம் எனும் சிறுகதையின் கதைக்களம் இந்திய நாட்டின் மத்தியப்பகுதியாக அமைகிறது. இப்பகுதி மக்கள் கொடிய பஞ்சத்தினால் வாடுகின்றனர். கதையில் வரும் கன்பத் சக்காராம் நாத்ரே எழுபத்து மூன்று வயதானவர்.இவரது மகன் பாகோஜி கன்பத் நாத்ரே ஊரில் நிலவும் பஞ்சத்தினால் தனது மனைவி மற்றும் இரண்டு பெண் குழந்தைகளுடன் தற்கொலை செய்து கொள்கிறான். கன்பத் சக்காராம் நாத்ரே அனாதையாகிறார். ஆதரிப்பார் இன்றி பசிக்கொடுமையால் பிச்சை எடுத்து உண்ணும் நிலைக்கு ஆளாகிறார் என்பதுடன் கதை நிறைவடைகிறது.

**வறட்சிக்கான காரணங்கள்**

இயற்கை மனிதனுக்குப் பல செல்வங்களை வாரிக்கொடுக்கிறது. ஆனாலும் மனிதன் அதைச் சுருட்டத் தொடங்குகிறான்.காடுகளை அழிக்கிறான். அதனால் மழைவளம் குறைகிறது. வறட்சி உண்டாகிறது.

**நீர்வளம்குறைதல்:**

மனித வாழ்வின் ஆதாரமே நீர்தான். மனிதனையும், நாட்டினையும் செழுமைப்படுத்துவது நீரே. உலகில் உள்ள அனைத்து உயிர்களும், உயிர் வாழ நீர் மிகவும் இன்றியமையாதது. மழையினால்தான் உலகம் உள்ளது என்பதை,

> வான்நின்று உலகம் வழங்கிவருதலால் தான்
> அமிழ்தம் என்றுணரற் பாற்று[1] என்கிறார் வள்ளுவர்.

பயிர் விளையவும், அப்பயிரை உணவாக்கவும் நீர் மூலப்பொருளாகிறது. இதை,

> துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
> துப்பாய தூவும் மழை[2]

என்கிறார். இத்தகு நீர்வளம் குறைவதால் நிலம் வறண்டு போகிறது.

**நிலம் வறண்டு போதல்:**

யாம்உண்பேம் சிறுகதையில் இடம்பெறும் நிலப்பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக மாறுகிறது. போதிய மழையின்மையால் புன்செய்காடுகள் வறண்டு வெடித்துக் காணப்படுகின்றன. நல்ல மரங்கள் வளர்வதற்கான சூழ்நிலை அங்கில்லை. இதனை 'புஞ்சைக்காடுகள் எல்லாம் சுக்காம் பாறை போலக் கெட்டிப்பட்டு வறண்டு வெடித்து வாய் பிளந்து கிடந்தன. சீமைக்கருவை, எருக்கலை, பீநாறி தவிர வேறெதுவும் உயிர் வாழ்வதற்கான தோது இல்லை.' பக்.30 எனும் வரிகள் இயம்புகின்றன.

**வெயிலின் கொடூரம்:**

மழையின்மையால் வெயிலின் கொடூரம் அவ்விடங்களை வாட்டுகின்றது. மூங்கில் புற்கள் கூட காய்ந்து வறண்டு போகின்றன. 'வழக்கமாய்க் காடு பிடித்துக் கிடக்கும் மூங்கிற் புற்கள் காய்ந்து குற்றி குற்றியாய் நீட்டிக்கொண்டு நின்றன.ஒரு தீக்குச்சி போதும் பற்றிப் படர்ந்து எரிய. அனலாய்க் கொளுத்திய வெயில், மனித, மிருக உடம்புகளில் இருந்த மிச்ச ஈரத்தையும் உறிஞ்சிக் கொண்டிருந்தது.' பக்.30 எனும் வரிகள் கோடையின் உக்கிரத்தைக் கண்முன் நிறுத்துகின்றன.

**உணவுத்தட்டுப்பாடு:**

புறநானூறு உணவெனப்படுவது நிலத்தொடு நீரே[3] என்கிறது. நீரின்மையால் செழுமையில்லை; வளமையுமில்லை; உண்பதற்கு உணவுமில்லை. விதைச்சோளமும் ரொட்டியாகச் சீரணமாகி விட்டது. ரேசன் கடையில் மக்கிய கோதுமையும் மக்காச்சோள ரவையும் போட்டார்கள். கடித்துக் கொள்ள வெங்காயத்துக்கும் சண்டு மிளகாய் வற்றலுக்கும் போக்கில்லை. பக்.30 கனிவுடன் பள்ளிக் குழந்தைகளுக்கு மதியம் ஒரு வேளை மக்காச்சோள ரவை எனும் பெயரில் களி போன்றதொன்றைக் கிண்டிப்போட்டார்கள். வயிற்றின் காந்தல்,உப்பின் சுவையைக்கூட எதிர்பார்க்கவில்லை. கொடுந்தீயொன்று குமுறிக் குமுறி எரிந்து கொண்டிருந்தது பங்கு பங்காக யாவர் வயிற்றிலும். பிள்ளைகளுக்குப் போட்டியாகக் கிழடு கட்டைகளும் அலுமினியத் தட்டேந்தி நின்றார்கள்.' பக்.31 எனும் சிறுகதை வரிகள் மூலம் பசிக்கொடுமையின் வேதனை தெளிவாகிறது. வறட்சி மனித வயிறுகளை வதைப்பதை அறிய முடிகிறது.

> 'நல்ல பண்டங்களைக் கண்டறியோம் - ஒரு
> நாளும் வயிறார உண்டறியோம்.
> அல்லும்பகலும்அலைந்திடுவோம்
> ஆற வழியின்றி வாடிடுவோம்'[4]

எனும் கவிமணியின் கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.



Scanned by CamScanner

**கால்நடைகள் பாதிக்கப்படல்:**

வறட்சியால் மனிதர்கள் உண்ண உணவின்றித் தவிப்பதோடு ஒன்றுமறியாத வாயில்லாத உயிர்களான கால்நடைகளும் பாதிக்கப்படுகின்றன.'செவலை நாய்கள் மலங்கள் தேடி எப்போதும் அலைந்தவாறிருந்தன.'பக்.31

'குடிக்கத் தண்ணீரும் கரம்பப்புற்களும் அற்ற கால்நடைகள், உலர் திராட்சை போல் தோல் சுருங்க ஆரம்பித்த பின் தோலுக்காகவும் கறிக்காகவும் விறகு போல் காய்ந்த எலும்புகளுக்காகவும் கொம்புகளுக்காகவும் திறந்த டெம்போக்களில் நாக்பூருக்குப் போயின.'பக்.30 எனும் சிறுகதை வரிகள் மூலம் கால்நடைகளுக்கு நேர்கின்ற அவல நிலையினை அறிய முடிகிறது.

**உயிரை மாய்த்தல்:**

வறட்சியால் வறுமை நிலையினை அடைந்த மக்கள் பசித்துயரத்தினைத் தாங்க முடியாமலும்,வாழ வழி தெரியாமலும் குடும்பத்துடன் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கின்றனர்.யாம்உண்பேம் சிறுகதையில் வரும் கன்பத் சக்காராம் நாத்ரே என்ற முதியவரின் மகன் வறுமையால் தன் மனைவி மற்றும் இரண்டு மகள்களுடன் தற்கொலை செய்து கொள்கிறான். 'பஞ்சம் என்பது தாண்ட முடியாத பாழ்கிணறாக வழி மறித்துக் கிடந்தது.எனில் எதற்காகத் தன் மகன் பாகோஜி கன்பத் நாத்ரே தனது உயிரையும் மனைவியின் மகள்களின் உயிரையும் தூவென உமிழ்ந்தான்?' பக்.32 எனும் வரிகள் வறட்சியினால் நேர்ந்த பஞ்சம் மனிதர்களைத் தற்கொலைக்குத் தூண்டுகிறது.பொன்னான உயிரை மாய்க்க வைக்கிறது என்ற உண்மையை உணர வைக்கின்றன.

**அனாதையாதல்:**

பாகோஜி கன்பத் நாத்ரே வறுமையால் தனது குடும்பத்துடன் தற்கொலை செய்து கொண்டதால் அவரது தந்தையான எழுபத்து மூன்று வயதான கன்பத் சக்காராம் நாத்ரே அனாதையாகிறார். வரிசையாகக் கிடத்தப்பட்டிருந்தன நான்கு சவங்கள்.கொள்ளிக்குடம் சுமக்கையில் ஈரல் கீறிப்பிளந்து வேதனித்தது நாத்ரேக்கு. பக்.34 'கன்பத் சக்காராம் நாத்ரே,பைங்கன் வாடி சுடுகாட்டில் சாம்பராகிக் காற்றில் பறந்து மண்ணோடு மண்ணாக மக்கிப் போகலாம் என்றுதான் காத்திருந்தார்.மேற்கில் கம்பாட் வளைகுடா அல்லது கிழக்கில் வங்காள விரிகுடா ஐந்நூறுக்கும் மேற்பட்ட மைல் தூரம்.எனவே கடலில் கரைய மார்க்கமில்லை.' பக்.31 எனும் சிறுகதை வரிகள் தள்ளாத வயதில் குடும்பத்தை இழந்து அனாதையாக மாறித் தனிமையில் வாடும் மனிதர்களை அடையாளம் காட்டுகின்றன.மேலும் கன்பத் சக்காராம் நாத்ரே பிச்சை எடுத்து உண்ணும் இழிநிலைக்கு ஆளாகிறார். 'பிடுங்காத குறையாகக் கையிலிருந்து வாங்கிய பொட்டலத்துடன் எதிர் இருக்கையில் உட்கார்ந்து,கால் துண்டு ரொட்டியில் கால் துண்டை வாயில் போட்டு மெல்லலானார் நாத்ரே.உமிழ்நீர் நரம்புகள் வெட்டி இழுத்துச் சுரந்ததன் வலியில் சற்றுக் கோணியது வாய்.சுரந்த கண்கள் வடிந்தவாறு இருந்தன.யுகங்களாய்த் தொடர்ந்த மனித குலத்தின் பசியின் வடிவமாய் நாத்ரே காரமான பச்சை மிளகாயைக் 'கரக்'கெனக் கடித்தார்'.பக்.36 வயதான காலத்தில் ஆதரிக்க குடும்பம் இல்லாமல், பசியாற்ற ஒருவேளை உணவு இல்லாமல் மனிதன் தன்னிலை அழிந்து துயர்பட வறட்சி அடிப்படைக் காரணமாகிறது என்பதை இதன் மூலம் உணர முடிகிறது.

**தீர்வுகள்:**

- மனிதனது சுயநலம் இயற்கையைத் துண்டாடுகிறது. அதன் விளைவாக நீர்வளம் அற்று வறட்சி உண்டாகிறது.
- அது வறுமையையும், உணவுப் பற்றாக் குறையையும் ஏற்படுத்துகிறது.
- வறுமை மனிதனை மரணிக்கத் தூண்டுகிறது; அனாதையாக்குகிறது; பிச்சையெடுத்து உண்ணும் அவலத்திற்கு ஆளாக்குகிறது.

**துணைநின்றநூல்கள்:**

1. மு.வரதராசனார்,(உ.ஆ).,திருக்குறள்,எண்11.
2. மேலது., எண்12.
3. புறநானூறு,பா.எண்18,அடி21.
4. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, மலரும் மாலையும், பா.எண்7.

◆◆◆

Scanned by CamScanner